# உடுமலையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## தஞ்சை கோவிந்தராஜன், பட்டுக்கோட்டை அழகிரிசாமி வீரகர்ஜனை.

(ஒரு நிருபர்)

உடுமலைப்பேட்டை, ஜுலை.26

உடுமலை இந்தி எதிர்ப்புக் கழகத்தின் ஆதரவில் அலிசவுக்கில் தோழர் எம். எஸ். கனகராஜன் தலைமையில் 22-7-38ந் தேதி வெள்ளி மாலை 6 மணிக்கு ஓர் கூட்டம் கூடியது. அது சமயம் தஞ்சை தோழர் பி. கோவிந்தராஜனும் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகிரிசாமியும் விரிவுரை நிகழ்த்தினார்கள். இக்கூட்டத்திற்குச் சுமார் 500 மக்கள் வரை வந்திருந்தனர். முன்னவர் காங்கரஸ் ஆட்சியின் அலங்கோலத்தையும், கனம் ராஜகோபாலாச்சாரியின் அடக்குமுறைத் திருவிளையாடல்களையும் இந்தியின் புரட்டுக்களையும், மஞ்சள் பெட்டிக்கு வாக்களித்து மதியிழந்து நிற்கும் நிலையையும், உத்தியோகம் முழுதும் பார்ப்பன மயமாகும் வகைகளையும் கூடியிருந்த மக்கள் பலர் மனத்திலும் தெளிவாகப் பதியும் வண்ணம் பல ஆதாரங்களுடனும், இனிய பாடல்களிலும் அழகாக விளக்கிக் காட்டினார்.

அதன் பின்னர் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் இந்தி கட்டாயப் பாடமாக்கும் கனம் ஆச்சாரியின் நயவஞ்சகத்தையும் பண்டைத் தமிழரின் சிறப்பையும், வட ஆரியர தமிழ் நாட்டில் குடியேறிய பின்பு ஆரிய மொழியாகிய (வடமொழி) சமஸ்கிருதம் தமிழ் மொழியில் நூற்றுக்கு அறுபது பங்குக்கு மேலாகவே இரண்டறக் கலந்து மணிப்பிரவாள நடையாகி தனித்தமிழ் மொழியின் சிறப்பு ஒழிந்து சீழிந்திருக்கும் பரிதாப நிலைமையும் ஆங்கிலம் கட்டாய மொழியாகப் புகுத்தப்பட்டதால் எஞ்சி நின்ற தமிழ் மொழியும் கழுதை தேய்ந்து கட்டெறும்பானதைப் போல அழிந்து கொண்டே வரும் வகைகளையும் மானங்கெட்ட தமிழர்களே கோடரிக் காம்புகளாய் நம் தமிழ் குலம் சிதைய வட ஆரிய காங்கரஸ் பார்ப்பனர்களுடன் கூடி சதி செய்யும் சூழ்ச்சிகளையும் விளக்கி இலக்கிய இலக்கண வளப்பமில்லாததுடன் அறிவு வளர்ச்சிக்குக் கலை சொற்களே இல்லாததும் விஞ்ஞான முறைகளைத் தன்னகத்துக் கொள்ளத் திறமை இல்லாததும், முற்போக்கு உணர்ச்சியினசிக்ஷத்தைத் தடைப்படுத்தி பௌராணிக மனப் பான்மையை வளர்த்தி பிற்போக்கில் கொண்டு சேர்த்து சுதந்தர சுயமரியாதை உணர்ச்சியை அழித்து, வருணாசிரமதர்மம் நிறைந்த பார்ப்பன பாஷையாகிய சமஸ்கிருதம் முக்கால் பங்கும் உருது கால் பங்குமாகக் கலந்து சற்றேறக் குறைய 450 ஆண்டுகளின் முன்னர் தோன்றிய லம்பாடி பாஷையாகிய இந்தியைக் கட்டாய பாடமாக்குவதினால், உயர் தனிச் செம்மொழியான தமிழ் மொழி முற்றும் அழிவதுடன் அம்மொழிக்குரிய தமிழரின் நாகரிகம் தமிழ்நாடு, தமிழ்ப் பெருங்குடிகளின் கூட்டம் இவைகள் அழிந்துவட ஆரியவர்க்கத்தாருக்கு என்றென்றும் அடிமையாவதுடன் வைணவ மதத்தையே சிறப்பிக்கும் இவ்விந்தியை வைணவப் பார்ப்பன அரசாங்கம் கட்டாய பாடமாகப் புகுத்துவதால் இவ்விந்தி சைவ சமயத்தையும் அழிக்கத்தான் செய்யும் என்பதுடன் பார்ப்பனரல்லாத பிள்ளைகளின் கல்வியையும் தடைப்படுத்தச் செய்யும் என்பனவைகளைச் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறி இனித்தமிழர்களின் கடமையும் ஒற்றுமையாகக்கட்சி பேதம் பாராட்டாமல் உழைக்கவேண்டிய இன்றியமையாத்தன்மையையும் கேட்போர் மனத்தில் ஐயம் நீங்கி உண்மை உணரும்படியாக அரிய சொற்பொழிவாற்றினார்.

பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8-45க்கு கூட்டம் கலைந்தது. முடிவு வரை பொது மக்கள் அமைதியாக மிக்க ஆர்வத்துடன் கேட்டு காங்கரஸ் ஆட்சியின் பித்தலாட்டங்களை உணர்ந்து வெறுப்பாகப் பேசிக்கொண்டே கலைந்து சென்றார்கள்.

---

# பாஞ்சாலத்தில் இந்தி.

## சர்வகலாசாலை அதிகாரிகள் சூழ்ச்சி.

### "ஈஸ்டர்ன் டைம்ஸ்" கண்டனம்.

(கோவை எ. எம். யூசுப் மொழி பெயர்ப்பு)

சென்னை முதன் மந்திரி கனம் ராஜகோபாலாச்சாரியார் சென்னை மாகாணத்தில் தமிழர்களின் நாகரிகமும், இலக்கியமும் நிறைந்த இனிய தமிழ்மொழியையும், முஸ்லிம்களின் நாகரிகமும் இலக்கியமும் நிறைந்த உருது மொழியையும் ஒழித்து தனது மனுஸ்மிருதி கொள்கைகள் நிறைந்த இந்தி மொழியை கட்டாயமாகவும், பலாத்காரமாகவும் புகுத்த முயற்சித்து வருவதைப் போல் பாஞ்சாலத்திலும் உருது மொழியை நாசப்படுத்தி இந்தியை நுழைக்க அநேக சூழ்ச்சிகளும் தந்திரங்களும் செய்து வருவதாக தெரியவருகிறது.

பாஞ்சால சர்வகலாக் கழகத்தில்இருக்கக்கூடியவர்களில் 100க்கு 60 பேர்கள் இந்துக்களாகும் பிரதி வருடமும் மேற்படி சர்வகலாசாலையில் இந்தி, சமஸ்கிருதம் குர்முகி முதலிய பாஷைகளின் கேள்வித்தாள்கள் மாணவர்கட்கு மிக கஷ்டமில்லாமலும் கடினமான பதங்கள் இல்லாமலும் கொடுக்கப்பட்டு அதன் மூலம் ஏராளமான மாணவர்கள் இந்தி சமஸ்கிருதம் குர்முகி முதலிய பாஷைகளில் தேறி வருகின்றார்கள். 12, 13. வயதுள்ள சிறிய மாணவர்கள்கூட அந்தக் கேள்வித்தாள்களுக்கு விடை எழுதி விடுகின்றார்களென்றால் அந்தக் கேள்வித்தாளின் மர்மம் எப்படி இருக்குமென்பதை யாம் எழுதவும் வேண்டுமோ!

ஆனால் உருது பாஷைக்கு ஏற்படுத்தி இருக்கிற கேள்வித்தாள் மிகக் கடினமும் கஷ்டமும் நிறைந்ததாக காணப்படுகின்றது. இதன் காரணமாக உருதுமொழி படிக்க போகக்கூடிய மாணவர்களில் 100-க்கு 26 மாணவர்களும் தோல்வியடைந்து வருகின்றார்கள்.

இவ்வாண்டு எ. பாஸில் பரீட்சைக்கு 259 பேர்கள் மாத்திரம் தான் வந்திருந்தார்கள். ஆனால் இந்தி பரீட்சைக்கு 1100 பேர்களும் குர்முகி பாஷை பரிட்சைக்கு 1000 மாணவர்களும் வந்திருந்தார்கள்.

இந்த சூழ்ச்சியைக் குறித்து முஸ்லிம் பத்திரிகைகள் எவ்வளவோ எழுதி கிளர்ச்சி செய்தும் அஃது கானகத்திலிட்ட கூக்குரல் மாதிரி ஆயிற்று. எ "பாசில்" பரிட்சையிலும் எ "ஆலீம்" பரிட்சையிலும் கேள்விகள் மிக கடினமாகவிருந்ததினால் இந்த வருடம் பரிட்சைக்கிருந்தவர்களில் யாராவது வெற்றி பெறுவார்களோ யென்பது மிக மிக சந்தேகமாகும். பொது ஜனங்கள் இது விஷயத்தை எவ்வளவோ சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு எடு